செ.வெ.எண்: 40 நாள்: 23.12.2016

**திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் ரூ.1.58 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.12.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் திருமயம் ஊராட்சி ஒன்றியம், அரசம்பட்டி ஊராட்சி, மெய்யம்பட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.90000 மதிப்பீட்டில் கட்டப்பட்டு செயல்பட்டு வரும் மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் பணியையும், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீட்டின் கட்டுமானப்பணியையும், ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் திருவன்கண்மாயில் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நாட்டு கருவேல் மரக்கன்றுகள் பணியையும், தனிநபர் இல்லக்கழிவறை கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.12000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட தனிநபர் இல்லக்கழிவறை கட்டுமானப் பணியையும், ஆதனூர் ஊராட்சி, அரண்மனைப்பட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.25.65 இலட்சம் மதிப்பீட்டில் நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகள் பணியையும் என மொத்தம் ரூ.1,58,37,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது தனிநபர் இல்லக்கழிவறையினை தினமும் உரிய முறையில் பயன்படுத்தவும், மண்புழு இயற்கை உரத்தினை அதிக அளவு தயார் செய்து விவசாயிகளுக்கு வழங்கவும், மரக்கன்றுகளை சாலையோரங்கள், குளங்கள் மற்றும் கண்மாய்களில் நட்டு வளர்த்து தினமும் நீர் ஊற்றி பராமரிக்கவும், மேலும் முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களைக் கொண்டு விரைவாக கட்டி முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வேலு, வட்டாட்சியர் திரு.சார்லஸ், உதவி பொறியாளர்கள் திரு.பழனியப்பன், திரு.சேது மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**